
# Community Health Learning Programme 2010




Source: Community Health Cell

## A Report on the Community Health Learning Experience

Shobha P.

COMMUNITY HEALTH CELL

# Community Health Learning Programme

## March 2010 to November 2010

**REPORT**

Ms.P.SHOBHA
Intern, Community Health Cell

# My Internship report
## Shoba P

### Why I Joined the Fellowship

During my social work studies I had not really developed much interest on social work. Immediately after my studies along with my friend, I visited many voluntary organizations. During those visits I had interacted with many of the staff members of these organizations. These conversations gave me the motivation to explore social work paradigms and continue the same in my journey for choose a meaningful career. Post tsunami at the time NGOs were engaged in relief activities, I got the opportunity to work with Indian Red Cross Society as a Psycho Social support officer. During this job I had underwent many training programs and visited villages. These visits helped me to realize the difficulties rural people face. When Mr.Pushparaj, Secretary of Voluntary Health Services, Kaniyakumari (VHAK) informed me about the CHLO and suggested I explore the internship I realized this was an opportunity for me to know more about physical health aspects of human beings. I applied and was selected for the internship.

### Orientation program

The Orientation program introduced me different aspects of social and economic realities of people, I received a complete picture on health system and about the resources needed for better health systems. In depth discussions and various methods including monsoon game were used to explain the above issues. Monsoon game in particular was useful to me in many ways.

I have seen few documentary films to know the activities of Narmada Bachao Andolan, peoples' life in Mumbai slums and about Devadasi women.

### Exposure visits

**This visit touched my heart – The visit to JMS,** Potnal during the internship was a heart breaking trip to me. After my visit I prayed one more Ambedkar should be born in Potnal. The difficulties, atrocities and discrimination faced by the Dalit community in Potnal do not correlate with human values. I have reflected many times on civilization during this visit. The Devadasi system is kept alive here to crush the dalit women.

Dalit people are denied education which is a fundamental right of every citizen, entry to temple, quality water and health care is denied. The Government is not taking adequate steps to uplift them and remove l these discriminations. Women's daily struggles due to the lack of sanitation facilities cannot be expressed in writing.

I was not exposed to Dalit communities' life and discrimination in my district, so I have never realized the pain. I got a real picture of Dalit sufferings and denial of human rights. Indeed the Potnal visit turned everything I knew upside down and put me in a state of great shock.

At the same time I met Dalit women group who were successfully leading their lives by producing and selling terracotta sculptures. Skills of the women in producing and marketing the products are incomparable and bring hope of a life with less stress.

**Haveri Public hearing**

This public hearing was a new and different experience to me. Community mobilization, preparing the stage for equal share by community and health officials, collecting real life stories related to health, preparing testimonies were activities which involved lot of work and it was successfully done in this public hearing. During public hearings solutions and assurance was given to e individuals.

**Learning objectives**

- To understand primary health care
- To understand community health
- To understand National Rural Health Mission (NRHM) through Community Action for Health (CAH) project.
- To understand issues related to water & sanitation
- To explore opportunities of bring about changes in water & sanitation through community action

**Activities in the field**

My field placement was with VHAK, a voluntary organization working with children, youth groups and women. This organization is a district nodal organization for NRHM CAH project. The organization staff and secretary of VHAK helped me in many ways to achieve my internship objectives.

I have chosen 13 villages of Kariyamancikapuram Panchyat for my field work. After I visited Potnal I decided to work in a Dalit village to know more about Dalit community. As I mentioned earlier, I was not aware of the difficulties faced by the Dalit community but my internship opened up new avenues in my understanding and that is why I chose this Panchayat for my field work.

I draw a social map in this Panchayat to know the resources, issues, and the geography of the Panchayat and I found that the Dalit villages of this panchayat are located on the bank of open tanks where sewage water of entire panchayat collects.

I also found a village where the drinking water is contaminated. The village name is 'Paraikkal madam'. I have taken steps to purify the drinking water supply to this village. I met the panchayat president and the water department officials, explained to them the situations and difficulties experienced by the villagers following which steps were taken to build a new bore well for this village.

During my field work typhoid was highly prevalent in the Panchayat. I initiated a dialogue with VHSC committee members, Village Health Nurse and with VHAK. We

conducted an awareness program in the villages to take preventive measures and arrest the spread of typhoid.

The hamlets located near to the pond were vulnerable to get water borne diseases and typhoid. I have taken awareness classes in all the hamlets along with VHAK staff. I trained the VHSC members on typhoid related issues in turn they have conducted awareness programs in their villages.

An awareness program was conducted in the same panchayat on zero waste management. I joined the survey team and we have done a survey of the entire Panchayat on the waste disposal system. In specific I surveyed Kolathur village. Through this survey I found that the village lacks facilities for waste disposal, 25% households do not have toilets. They lack space to build individual toilets. There is widespread ignorance on safe defecation practices. As a follow up we conducted awareness program to the groups on the importance of safe toilet practices.

VHSC members took up the issue of waste disposal seriously and they had discussions with the Panchayat president to place waste collection boxes through out the villages. They identified suitable places to fix the waste collection boxes and now waste bins along with information boards have been placed in strategic locations in the village. Every third day sanitation workers collect wastes from the waste bins.

In Paraikkal madam village there are two public toilets but people were not using them and had actually damaged the facility. After discussions with the Panchayat president and villagers the toilets were renovated. Now the toilets are become pay and use toilets with a minimal charge of one rupee. As a spin off the near by village Kolathur is also taking steps to renovate their public toilets now.

I feel my major contribution is making VHSC members aware of these issues, as they have taken steps on sanitation and waste disposal in Paraikkal and Kolathur villages respectively I nurse the strong hope that the interest of VHSC will sustain for long time.

**NRHM-CMP**: I have learnt many things about VHSC such as their roles and responsibilities, orienting VHSCs on community participation and monitoring, functions of primary health centres and sub centres and issues like poor transportation, irregular services of VHN and poor quality services of PHC which curtail the peoples' accessibility to health centres.

I have oriented many VHSCs on water borne diseases.

I was also involved in the survey on Immunisation coverage done by VHAK. This survey gave me an opportunity to conduce house to house visits and get to know more about the health status of the people, their health seeking behaviors and information on whom they approach when they require medical care.

## Report on the last three months of internship period

Apart from engaging with and following up with village committees work, there are two major activities have been carried out in this period. I conducted a one day exhibition and awareness program on different issues for the villagers & school children and preparing a book let on water, water security and water borne diseases related information were the two major activities.

### Exhibition

One day exhibition on health and hygiene was conducted at Kozhikottu Potthai village of Ramapuram panchayat, Agasteeswaram block. Different stalls have been put up on nutrition, importance of water security and related issues, hygiene practices, water and vector borne diseases, facilities provided by PHC, Sub centre and government hospitals under National Rural Health Mission, 108 ambulance services and on children's parliament related activities. Lots of posters, materials and photos were put up on each issue. Many villagers, voluntary organization's staff & school children were invited and attended the exhibition.

During the exhibition a quiz program on the above issue was organized, in which many school children participated. I also organized film screening on waste management and water security during the exhibition, which helped the community to understand the issues easily and also used for mobilizing people to visit exhibition.

### Booklet

During this period I have prepared a booklet on water, water security and on water and vector borne diseases based on my field experience and the materials I have collected.

### Learning from last three months

I developed my skills and knowledge on preparing documents, handbills, preparation required to conduct training like budget preparation, knowledge of conducting training, role of health inspector, approaching government officials and conducting exhibition. These are my important learnings in the last three month period.

### Learning from group

**The concept of study circle** was very useful to me. It helped me to overcome my own fear and to express my learning and interest to the group. Living with people from different background and culture is a challenge and great learning experience which internship provided me. My co intern Manjula's assertiveness and commitment to dalit community boosted my confidence and commitment to the society. I also learnt a few words in Kannada and improved my fluency in English.

Group learning was a unique experience to me. Topics I have learnt covers a wide range of issues starting from difficulties of a Gujarat villager through Sejal to commercial sex workers' difficulties through Shivamma and Dalit issues through Manjula

**Overall learning**

During the orientation classes, field work and exposure visits I have learnt many things. I witnessed many real life ground realities faced by the powerless during my exposure visits which have touched my heart. I have felt helplessness and anguish many times.

Ms.Shoba's session on personality development helped me to compare my objectives with my personality and also learnt skills to handle issues during field work. Learning on importance of body language will help through out my life. This is session was distinct to me in many ways.

I learnt to draw a social map through Mr.Sam Joseph's workshop on Participatory Rural Appraisal. The workshop was done in villages of Kollegal. Skills on drawing a map, to collect information like communicable diseases spreading pattern from PRA exercise were taught through practical sessions in the villages. Major learning from this workshop to me was the multiple usages of PRA such as, building relief and welfare measures for any community, developing self reliance of the community and to understand changes in various systems.

Dr. Shridi's inputs on training were very useful during my field work. He also explained the importance of adopting different approaches to build trainees' knowledge, attitude and practical skills.

Through Dr.Vasundhra's session I have learnt many facts on tobacco and related diseases.

Ms. Satyashree's session was useful to know about HIV/AIDS. Sessions on disaster management was personally useful to me since I come from tsunami affected area and I used the information I got during the sessions in the tsunami affected areas in my district.

Ms. Lavanya's session on reporting was very useful to write my report. The session was very interactive and interesting methodologies were used to conduct the training, she used simple available materials to bring out the feeling of each intern. She explained the important principles in report writing.

During the initial days of internship I had developed few objectives related to my personality development such as leadership, speaking to group and documentation capacity. This internship provided me many opportunities to develop those skills. For example through preparing a booklet on water and related issues I have improved my documentation skills. Apart from these tangible skills, internship brought many changes in my attitude. Listening to others, positive speaking, accepting other's view and reflection on my own behaviour are few of them.

I thank my mentors Rakhal, Ameer and Pushparaj for all my learning and opportunities given to me.

அனைவருக்கும் நல வாழ்வு இப்பொழுதே !

# சமுதாய நலவாழ்வு குறித்த எனது கற்றல்

சமுதாய நல வாழ்வு குழு

பெங்களூரு

P. ஷோபா

நாகர்கோவில்

## பொருளடக்கம்


1. WHY DID I JOINED THE FELLOWSHIP
2. ORIENTATION PROGRAMME
3. INTRIDUCTION ABOUT NGO ( VHAK)
4. THREE MONTHS ACTIVITIES
5. WHAT I LEARNT MY SELF
6. OVER ALL LEARNINGS

# CHAPTER –I

## 1. WHY DID I JOINED THE FELLOWSHIP .

என்னுடைய பெயர் பி.ஷோபா. நான் சமூகத்தில் வேலைச் செய்வதற்கான (Master of Social Work) முதுகலை பட்டப்படிப்பு படித்து இருக்கின்றேன். நான் MSW - ல் சேர்ந்த போது எனக்கு அதன் பொருள், அடிப்படை நோக்கம் என்ன என்பது குறித்து தெரியாது. ஆறு மாதங்களாக கல்லூரிக்கு சென்று வந்த பின்பும் அந்த படிப்பு பற்றி என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஏனெனில் எனக்கு அந்த படிப்பில் விருப்பம் இல்லை. அதன் பின்னர் பல நிறுவனங்களுக்கு / அமைப்புகளுக்கு சென்றோம். அங்கு அவர்களுடைய வேலைகளை அந்நிறுவன அலுவலர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் அழகாக விவரித்தனர். ஆறு மாதங்கள் கடந்த பிறகு கொஞ்சம் அடிப்படையான விவரங்களை கற்றுக் கொண்டேன் . பின்னர் என்னுடைய தோழியான என்.ராதிகாவும், நானும் பேசிக் கொண்டோம் . இப்படி எல்லாம் நிறுவனங்கள் செயல்படுகிறது . நம்மால் என்ன செய்ய முடியும் . அதாவது அவர்களை மாதிரி நம்மால் வர முடியுமா? என்ற கேள்வியானது எங்களுக்குள் அடிக்கடி எழுந்ததுண்டு . MSW முடித்த பின்னர் நாங்கள் இரண்டு பேரும் சேர்ந்து இரண்டு வருடங்கள் இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டியில் ( IRCS ) வேலைபார்க்க கூடிய தருணம் எங்களுடைய ஆசிரியரால் கிடைத்தது. மன ரீதியான முதலுதவியாளர் ( PSSO) எனும் பொறுப்பில் அங்கு பணி செய்தேன் .

முதல் 14 நாள் IRCS பொறுப்பாளர்கள் மற்றும் அதற்கு மேல் உள்ள பொறுப்பாளர்கள் அதிக பயிற்சிகள் கொடுத்தனர் . அது எனக்கு மிகவும் உதவியாக இருந்தது , அது மட்டுமல்லாமல் எனக்கு அந்த பயிற்சியானது புதிய அனுபவமாக இருந்தது . பின்னர் அவர்கள் ஒவ்வொரு பொறுப்பாளர்களுக்கும் பொறுப்புக்களையும், வேலைச் செய்யக்கூடிய இடங்களையும் பிரித்து கொடுத்தனர். “ நலமான, பாதுகாப்பான சமுதாயத்தை உருவாக்க வேண்டும் ” என்பதே IRCS – ன் முக்கிய நோக்கம்.

IRCS – 53 அரசு பள்ளிகளையும், 40 சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராமங்களையும் (கடற்கரையை தொட்டு அடுத்துள்ள கிராமங்கள்) தேர்வு செய்தனர். எங்களில் சிலரை மனரீதியான உதவியாளர்கள் எனவும், சிலரை உடல் ரீதியான உதவியாளர்கள் எனவும் இரண்டாக பிரிதனர். மனரீதியான உதவியாளர்கள் பள்ளிகளில் பணி செய்வதற்காகவும், உடல் ரீதியான உதவியாளர்கள் கிராமங்களில் பணி செய்வதற்காகவும் பிரித்து வேலையளித்தனர்.

**IRCS மேற்கொண்ட பணிகள்**

- ❖ தன்னார்வலர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு உடல் ரீதியான, மன ரீதியான பயிற்சி அளித்தல்.
- ❖ கிராம குழு அமைத்தல்.
- ❖ கொசு வலை வழங்குதல் .
- ❖ கிராம சுகாதார திருவிழா நடத்துதல்.
- ❖ பள்ளி சுகாதார விழா நடத்துதல்.

- ❖ திறமைகளை ஊக்குவிப்பதற்கான பயிற்சி அளித்தல் மற்றும் அதற்கான வசதிகளைக் கிராமங்கள் மற்றும் பள்ளிகளில் செய்து தருதல்.
- ❖ பள்ளி மற்றும் கிராம வரைபடங்களை உருவாக்குதல்.
- ❖ கிராமத்தில் கண்டுப்பிடிக்கப்பட்ட இடர்களை களைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் வளங்களை அதிகரிக்க முயற்சிகளை மேற்கொள்ளுதல்
- ❖ கிராம குழு மூலமாக பேரழிவு குறித்து பள்ளி குழந்தைகளுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் தயார் படுத்துதல்.
- ❖ கிராமங்களில் கொசு மற்றும் நீரினால் பரவும் நோய்கள் விழிப்புணர்வு மற்றும் பயிற்சிகள் அளித்தல்.

பள்ளிகளில் தனி ஒரு ஆளாக மேற் கண்ட பல செயல்பாடுகளால் அந்த சமயங்களில் என்னால் அதிகம் உடல் ரீதியான செயல்பாடுகளில் கலந்து கொள்ள முடியவில்லை . சில சமயங்களில் மட்டுமே கிராமங்களில் விழிப்புணர்வு வகுப்புகளை என்னால் நடத்த முடிந்தது.

பின்னர் Voluntary Health Association of Kanyakumariயின் செயலாளர் திரு.புஷ்பராஜ் அவர்கள் எனக்கு தொலைபேசி மூலம் தகவல் தொடர்பு கொண்டு CHLP நிகழ்வு பற்றி பேசினார். கடந்த 2 வருடமாக என்னால் அடைய முடியாதவற்றையும் ( உடல் நலம் ரீதியான) சேர்த்து கூடுதலாக அறிய வேண்டும் என்ற ஆர்வமும் என்னுள்ளே எழுந்தது . அதனால் மிகுந்த யோசனைக்கு பின்னர் CHLP -க்கு என்னுடைய விண்ணப்பத்தை அனுப்பினேன். ஊடல் நலம் ரீதியான புத்தகங்களை தேடி படித்தேன் . ஒரு வாரத்திற்கு பிறகு CHC தொலைபேசி வாயிலாகவும், கணிணி வழியாகவும் என்னை நேர்முகத் தேர்வுக்கு அழைத்தனர். உடல் நலம் ரீதியாக எனக்கு நிறைய தகவல்கள் தெரியாததால் அந்த சமயத்தில் இருந்தே எப்படி நேர்முகத் தேர்வில் பதிலளிக்கப் போகிறேன் என்று

மிகவும் பயப்பட்டேன். பின்னர் நானாகவே எனக்குள்ளே தன்னம்பிக்கையை உருவாக்கிக் கொண்டு நேர்முகத் தேர்வில் பதிலளித்தேன். தற்பொழுது CHC எனக்கு ஒரு நல்ல வாய்ப்பு கொடுத்து இருக்கிறது . அதை நல்ல முறையில் நான் உபயோகப்படுத்துவேன் . முதல் முறையாக நான் VHAK செயலர் திரு. புஷ்பராஜ் அவர்களுக்கும் இரண்டாவதாக CHC-க்கும், என்னுடைய Mentor Dr.Rakhal , Mr.Ameer அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## CHAPTER- II

## 2. ORIENTATION PROGRAMAME

- CHC யின் செயல்பாடுகள், நோக்கங்கள் அதனுடன் என்னென்ன களப்பணிகளை மேற்கொள்கின்றனர் என்பதை Orientation வகுப்பு மூலம் நான் கற்றுக் கொண்டேன்.
- Health System - ன் முக்கியத்துவம் என்ன என்பதனையும், அதில் எவ்வாறு களப்பணி செய்வது என்பதையும் புரிந்து கொண்டேன்.
- ஒரு நல்ல Health System -க்கு என்னென்ன தேவை என்பதை இந்த வகுப்பின் மூலம் புரிந்துக் கொண்டேன். (எ.கா.) மனித வளங்கள், மூலதனங்கள், நல்ல தரமான அரசாங்க மருத்துவ சேவைகள், சுத்தமான தண்ணீர் , மக்களின் பங்கேற்பு ஆகிய அனைத்தும் சேர்ந்தால் தான் ஒரு வளமான Health System - ஐ உருவாக்க முடியும் .

இந்தப்பயிற்சியின் வாயிலாக நான் புரிந்துக் கொண்டது Health System - இருந்தால் தான் ஒரு வளமான கிராமத்தை உருவாக்க முடியும் என்றும் நான் புரிந்து கொண்டேன்.

## WORKING WITH DALIT COMMUNITY

மறக்க முடியாத அனுபவங்கள் ...........

என்னை ஈர்த்த அனுபவங்கள் .......

### போத்தனால் ( Pothnal )

CHLP FELLOWS POTHNAL – க்கு குழுவாக சென்றோம் . அங்கு தலித் (Dalit) மக்கள் அதிகம் வாழ்வின்றனர். நாங்கள் அவர்களுள் ஒருவராகி அவர்களுடைய வாழ்க்கை

பயணங்களை கேட்டோம் . அப்போது தான் என்னால் அவர்களை முழுவதுமாக உணர முடிந்தது .

" சாதி எனும் கொடிய பேய் இன்னும் "Pothnal"- ஐ விட்டு போகவில்லையே ஏன் ?"

"இங்கும் ஒரு 'அம்பேத்கார' பிறந்திருக்க கூடாதா !" - என்ற சிந்தனையானது என்னுள்ளே வெறியாக கிளம்பியது .

**என்னை உருக்கிய அனுபவம்**

தலித் இன மக்கள் இந்த நூற்றாண்டிலும் சாதியின் பெயரால் துன்புறுத்தப்படும் நேரத்தில், உயர்ந்த சாதியினர் அவர்களுக்கு தேவைப்பட்ட நேரத்தில் தாழ்ந்த சாதியினரை (Dalit) உபயோகிப்பதற்காக "தேவதாசி" என்னும் கொடிய படுகுழியில் தள்ளுகின்றனர் . இப்படியும் மனிதர்கள் வாழ்கின்றனரா? என்ற கேள்வி என்னுள்ளே எழுந்த போது……

அடுத்து சில முக்கியமான பிரச்சனையான கல்வி உரிமை பறிக்கப்படுவதையும், கோவிலுக்குள் நுழையும் உரிமை பறிக்கப்படுவதையும் தாண்டி நசுக்கப்பட்ட சூழலில் வாழும் குழந்தைகள் மற்றும் மக்கள் படிக்க மறுக்கப்படுதல், மனிதனுக்கு அடிப்படைத் தேவையான கல்வி , தண்ணீர், உணவு கிடைக்காததால் தலித் இன மக்களில் அதிகமானோர் நோய்வாய்படுகின்றனர். தலித் இன மக்கள் முன்னேற்றப் பாதையில் செல்வதற்கோ, முன்னேற்றம் அடைவதற்கோ அரசாங்கமானது அடிப்படை வசதிகளான கல்வியறிவின்மை, தண்ணீர் வசதி, போதிய சுகாதார வசதியின்மை ஆகியவற்றை களைய எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காததே முக்கியமான காரணம் ….

அந்த மக்களிடையே கலந்துரையாடிய போது கிராமத்தில் என்னென்ன வசதிகள் இருக்கின்றன என்பதை சுற்றும் முற்றும் சென்று பார்த்தோம் .ஒரு மனிதனுக்கு அடிப்படைத் தேவையானது தண்ணீர். ஆனால் அந்த கிராமங்களில் ஊராட்சியானது

பொது நல்லிகளை பொருத்தியும் தண்ணீர் வரவில்லை. அடுத்து எந்த வீடுகளிலும் பார்க்க முடியாத கழிவறை வசதிகள். முக்கியமாக பெண்கள் பகல் நேரங்களில் செல்ல முடியாததால் கட்டுப்படுத்தி கொண்டு இரவு நேரங்களில் மட்டும் மலம் கழிக்கின்றனர்; அதுவும் “ திறந்த வெளியில் ”.

பாருங்கள் …… எவ்வகையான பிரச்சனைகளை Dalit மக்கள் சந்திக்கின்றனர். இதனால் என்னென்ன வகையான நோய்களுக்கு உட்படகின்றார்கள் என்று பாவம் அந்த அப்பாவி மக்களுக்கு தெரியவில்லை! அதுவே பெரிய வேதனை. என்னை பாதித்த இந்த பெரிய கொடுமையை என்னை சிந்திக்கவும் வைத்தது. Terracotta கைவினைப்பொருள்கள், நாட்டு மருந்து தயாரித்தல், சந்தை மற்றும் விற்பனை செய்யும் திறமை, வங்கி முறைகளைப் பற்றிய அறிவு இப்படிப்பட்ட பல்வேறு திறமைகள் அவர்களுக்குள் இருக்கின்றது என்று கேட்டறிந்த போது என்னுள்ளே நான் வியந்து போனேன்.

## HAVERI PUBLIC HEARING

இதுவும் முக்கியமான வித்தியாசமான , புதவிதமான அனுபவம். ஒவ்வொரு கிராமங்களிலும் பணி செய்யும் பணியாளர்கள் Dalit மக்கள், மலைவாழ் மக்கள், காட்டு நாயக்கர் ஆகிய இவர்களை ஒன்றிணைத்து ஒரு பொது இடத்தில் கூட்டுவது என்பது மிகப்பெரிய கஷ்டம். அது மட்டுமல்லாமல் அந்த நிகழ்வுகளில் அரசாங்க அதிகாரிகளான மருத்துவர், மந்திரி, சுகாதார அலுவலர் ஆகியவர்களை வரவழைத்து மக்களுடைய குறைகளை விவாதிப்பது, துணை சுகாதார நிலையம் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள பணியாளர்களின் பணிகள் பற்றியும் , மக்களிடையே நடந்த உண்மை சம்பவங்களை இவர்கள் முன்னிலையில் பேசுவதற்கு (அவர்களது பிரச்சனைகளை எடுத்துக் கூறி அதற்கு தீர்மானம் காண்பதற்கு இது ஒரு முக்கியமான தளமாகும்) உரிமை கொடுத்து, அந்த பிரச்சனைகளுக்கு தேவையான தீர்வுகளை அந்த

இடத்தில் கிடைக்க வழிவகைச் செய்யப்பட்டு இருந்தன. இது ஒரு வித்தியாசமான அனுபவம். அந்த நிகழ்வுகளின் போது நான் வித்தியாசமான மக்களைப் பார்த்து இன்னும் இப்படிப்பட்ட நாகரீகத்திலும் மக்கள் வாழ்கின்றனரா ! என்று சிந்தித்தேன்.

## THE SESSION THAT MADE AN IMPACT

Nimhans :- பேரிடர் பற்றிய வகுப்புகள் , முதலுதவி பற்றிய வகுப்புகளின் மூலம் சமுதாய ஒத்துழைப்பு , குடும்ப ஒத்துழைப்பு எல்லாம் சேர்ந்து கிடைத்தால் தான் மனரீதியான நோயைக் குணப்படுத்த முடியும் என்றும், உடல் ரீதியாக நாம் ஒருவர் காயம் பட்டு இருந்தால் முதலாவதாக என்னென்ன முதலுதவி கொடுக்க வேண்டும் என்றும், இரண்டாவது கட்டமாக அவர்களை எங்கு கொண்டு செல்ல வேண்டும் என்றும், எவ்வாறு அவர்களுக்கு உதவ வேண்டும் என்றும் புரிந்து கொள்ள முடிந்தது .

## UNITY IS STRENGTH – LEARNING FROM THE GROUP

CHC- எனக்கு ஏற்படுத்தி தந்த வாய்ப்புகளில் ஒரு முக்கியமான அனுபவம் என்னவென்றால் பக்கத்து மாநிலமான கா்நாடக மக்களிடம் பழகும் வாய்ப்பு. இது எனக்கு கிடைத்த மிகப்பெரிய வாய்ப்பு. வெவ்வேறு வகையான பின்னணிகளில் இருந்து Fellows வந்து இருந்தனா். அதிலும் அவர்களுடைய மொழியை தெரிந்து கொள்வது மிகப்பெரிய சவாலாக இருந்தது. மற்றொரு வகையில் அது பயனள்ளதாகவும் இருந்தது. கா்நாடக Fellows அவர்களுடைய பணிகளைப் பகிர்ந்து கொள்ளும் போது நாமும் அவர்களை மாதிரி செய்ய வேண்டும் என்ற எண்ணம் என்னுள்ளே எழுந்ததுண்டு . (எ.கா.) தலித் இன மக்களின் அடிப்படை உரிமைக்காக பல போராட்டங்களை நடத்துதல், கால் நடை யாத்திரை மற்றும் பல…..

முக்கியமாக மஞ்சுளா Fellow தலித் இனத்தவரிடையே அதிக நாள் வேலைச் செய்தது , அவர்களுடைய பிரச்னைப் பற்றி பேசும்போது எனக்குள்ளேயே பல எண்ணங்கள் எழுந்தன. இந்த மாதிரி தமிழ் நாட்டிலும் இருக்கின்றனரா? என்ற எண்ணம் எழுந்ததோடு அதைப்பற்றி கண்டிப்பாக அறிந்து கொள்ள வேண்டும் என்ற வெறியானது என்னுள்ளே எழுந்தது . ஒவ்வொரு Fellow -ம் வெவ்வேறான பின்னனிகளில் வேலைச் செய்து விட்டு வந்து இருந்தனா். மருத்துவம், தலித் சமுதாய பிரச்சனைகள், ஊனமுற்றோர்கள், பிரிவினைவாதம், பொறியியல், என பல்வேறு தளங்களிலிருந்து வந்திருந்தனர். அவர்களிடம் இருந்து நல்ல தகவல்களைப் பெற முடிந்தது .

ஒரு மாதம் Orientation குழு கலந்துரையாடல் மூலம் என்னால் மாற்று மொழிகளைக் கற்றுக் கொள்ள முடிந்தது (கன்னடம், ஆங்கிலம் ). இதனால் எனக்கு பொது மக்களிடையே பேசுவதற்கும், என்னுடைய எண்ணங்களைச் சொல்வதற்கும் என்னுள்ளே இருந்த பயம் நீங்கி தன்னம்பிக்கை வந்துள்ளது .

**SHERIDI 'S SESSION & ORIENTATION**

Dr. Sheridi's அமர்வு மூலமாக எனக்கு இப்போது ஒரு பயிற்சி கொடுக்க வேண்டுமென்றால் என்னென்ன முறைகளைக் கையாள வேண்டுமென்றும், பயிற்சியை எவ்வாறு நடத்தினால் எல்லோராலும் புரிந்து கொள்ள முடியும் என்றும் கற்று கொண்டேன் . இதன் மூலம் நான் என்னுடைய களப்பணியில் எவ்வகையான முறைகளைக் கையாலாம் என்று கற்றுக் கொண்டேன். அதுமட்டுமல்லாமல் கா்நாடகா மற்றும் குஜராத் interns மொத்தம் ஐந்து பேரும் ஒரே Hostel – ல் தங்கி இருந்தோம். அந்த சமயத்தில் எல்லோரும் அவரவா் கிராமங்களைப் பற்றியும் அங்கு உள்ள பிரச்சனைகளைப் பற்றியும் பேசிக்கொண்டோம் . முக்கியமாக மஞ்சுளா Intern தலித் இன மக்கள் பற்றியும் அவர்களுடைய பிரச்சனைகள்

பற்றியும், குழந்தை திருமணம் பற்றியும் பேசுவதுண்டு. குழந்தை திருமணம இன்னும் ஒழியவில்லை என்று அப்போது தான் எனக்கு தெரிய வந்தது.

சிவம்மா Intern அவருடைய சொந்த ஊரான Hospet ன் முக்கிய பிரச்சனையான பாலியல் தொழில் மற்றும் எச்.ஐ.வி/எயிட்ஸ் நோயாளிகள் (HIV/ AIDS) அதிகம்இருப்பதாகவும், அதுவே மிகப்பெரிய பிரச்சனை என்று கூறுகையில் என்னால் நம்ப முடியவில்லை. ஏனெனில் சொந்த கிராமங்களிலேயே ஊருக்குள்ளே எல்லோருக்கும் அறியும் படி இருந்தும் எதுவும் செய்ய முடியவில்லையே என்று நினைக்கும் போது மிகவும் வருத்தப்பட கூடியதாகும் .

அந்த கிராமத்தை பொறுத்தவரை பல தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் எச்.ஐ.வி/எயிட்ஸ் நோய்க்கு வேலைச் செய்து வருவதாகவும், விழிப்புணர்வு கொடுத்தும் வருகின்றனர் . ஆனாலும் மக்கள் ஒத்துழைப்பு கொடுக்காததே அந்த கிராமத்தில் நோய் குறையாததற்கு மிகப்பெரிய காரணமாகும். ஆனால் தற்போது மக்கள் மத்தியில் கொஞ்சம் விழிப்புணர்வு வந்துள்ளதாக தெரிய வந்துள்ளது .

## DOCUMENTARIES AND ARTICLES

நான் பார்த்த ஆவணப்படங்கள் (Documentary) படங்கள் மற்றும் புகைப்படங்கள்

- Narmada Bachao Andolan
- On Mumbai Slums - மும்பை சேரி மக்களின் வாழ்க்கையை பார்க்கும் போது மிகவும் கவலையை ஏற்படுத்தியது . இப்படியும் மக்கள் வாழ்கின்றனரே என்று கஷ்டமாக தோன்றியது.
- “அமெரிக்கா, அமெரிக்கா” என்ற பாடல் கேட்பதற்கும் பார்ப்பதற்கும் மிகவும் உற்சாகமாக இருந்தது

❖ தேவதாசி (Devadasi) பெண்களின் படங்களை பார்த்த போது என்னால் இப்படியும் நடக்குமா என்ற எண்ணம் தோன்றியது . அந்த பெண்களின் வாழ்க்கையானது மிகவும் வருத்தப்படக் கூடியதாக உள்ளது. சாதிப் பிரச்சனையால் அவர்கள் படும் கஷ்டத்தையும், இரவு முழுவதும் கோவில்களில் ஆடுவதைப் பார்க்கும் போதும் மனசாட்சி இல்லாத மனிதர்கள் இப்படியும் பெண்களை கஷ்டப்படுத்துகின்றனரே என்று அவர்கள் மீது வெறுப்பு உண்டாகின்றது. அது மட்டுமல்லாமல் அந்த பெண்களை கட்டாயப்படுத்தி தங்களது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு உபயோகிக்கின்றனர். ஆனால் அவர்கள் திருணம் செய்து கொள்ள உயர்ந்த சாதியினர் ஏற்றுக் கொள்வதில்லை.

**ARTICLES**

❖ Right to health Articles மிகவும் பயனள்ளதாக இருந்தது.

❖ Health Care in India Today.

❖ The Village Health Worker Lackey or Liberator.

❖ learning from the group.

## CHAPTER – III

## INTRODUCTION ABOUT NGO --- VHAK

கன்னியாகுமரி மாவட்ட தன்னார்வ நலவாழ்வு குழுமமானது 1993- ல் அருட்பணி M.J. எட்வின் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. 1994-ல் அரசில் பதிவு செய்யப்பட்டது. இது அக்கம் பக்கத்து பாராளுமன்றங்கள், இணைந்த செயல்பாடு, ஏழ்மை மற்றும் ஒருங்கிணைந்த பணிக்குவிவு ஆகிய 4 கோட்பாடுகளுடன் "மக்கள் நலம் மக்கள் கையில்!" என்ற கொள்கை முழக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. இது சமூகத்தில் வாழும் ஒவ்வொரு குழந்தைகளிடமிருந்தும் ஆரம்பமாகிறது.

1. உடல், உள்ளம், ஆன்மீக மற்றும் சமுக நலம் ஆகியவை ஒவ்வொரு தனிமனிதனின் அடிப்டை உரிமை என்பதை அறிவுறுத்துவது.
2. மக்கள் பங்கேற்கும் ஒரு மாற்று அரசாங்கத்தை அக்கம் பக்கத்து பாராளுமன்றங்கள் வழியாக செயல்படுத்துவது.
3. குழந்தைகளுக்கான, குழந்தைகளுக்கேற்ற ஒரு புதிய உலகம் அமைப்பது.
4. முழு நலத்தோடு மக்களை வாழ வழி காட்டுவது.
5. சுகாதாரம் சம்மந்தமான செயல்பாடுகளில் மக்களை முழு ஈடுபாடோடு ஈடுபடுத்துவது.
6. அந்தந்த இடச் சூழலுக்கு தகுந்தவாறு நலம் சார்ந்த, இயற்கைச் சார்ந்த, புதிய மற்றும் மாற்று யுக்திகளைக் கையாளுதல்.
7. கருத்தொற்றுமை உள்ள தொண்டு நிறுவனங்களுடனும், அமைப்புகளுடனும் இணைந்து செயல்படுதல்.

இவ்வாறான தொலைநோக்கு சிந்தனையுடன் VHAK நிறுவனமானது குமரி மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது.

கடந்த காலங்களில இந்த அமைப்பு குழந்தைகள், பெண்கள், இளைஞர்கள் மத்தியில் மிகச் சிறப்பாகவே பணியாற்றி உள்ளது. Unicef, Save the Children, Every Child, Cry போன்ற பன்னாட்டு தன்னார்வ அமைப்புக்களுடன் இணைந்து சுனாமி காலங்களிலும், அதற்கு முன்னும் பின்னும் மிகச் சிறப்பாக மக்களுக்கு பணியாற்றி வருகிறது. அதிலும் வாழ்வாதார உரிமைகள் குறிப்பாக குழந்தைகளின் உரிமைகளுக்காக பல்வேறு வடிவங்களில் விழிப்புணர்வும், போராட்டங்களையும் நடத்தி வந்திருக்கின்றது. குழந்தைகள் பாராளுமன்றத்தின் முன்னோடியாகவும் பிறப்பிடமாகவும் திகழ்ந்து வருகிறது.

தற்போது தேசிய ஊரக சுகாதார இயக்கத்தின் (NRHM) கீழ் “நலவாழ்விற்கான மக்கள் செயல்பாடு” என்ற திட்டத்தில் மக்கள் பங்கேற்புடன் அகஸ்தீஸ்வரம், குருந்தன்கோடு, கிள்ளியூர் ஆகிய ஒன்றியங்களில் மிகச் சிறப்பாக “கிராம நலவாழ்வு, நீர் மற்றும் துப்புரவு குழுக்களை வலுப்படுத்திச் செயல்படுத்தி வருகிறது.

## What did i learn about the community ?

நான் சமுதாயத்தில் வேலைச் செய்ததன் வாயிலாக எனக்கு நிறைய அனுபவங்கள் கிடைத்தன. முதன் முதலாக நான் VHAK secretary Mr. புஷ்பராஜ் அவர்களிடம் என்னுடைய Objectives பற்றி பேசினேன். அப்போது அவர் தேசிய ஊரக சுகாதார இயக்கம், நலவாழ்விற்கான மக்கள் செயல்பாடு பற்றியும் விரிவான Orientation கொடுத்தார். அது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. அதனைத் தொடர்ந்து மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தீபா அவர்கள் VHWSC என்றால் என்ன? எதற்காக தொடங்கப்பட்டது? என்றும், அதனுடைய Roles and Responsibilities பற்றியும் விரிவாக விளக்கினார் .

நான் Orientation பயிற்சிக்கு பிறகு எந்தெந்த ஊராட்சிகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் CAH Project -க்கு எடுத்துள்ளனர் என்பதை தெரிந்து கொண்டேன். நான் வேலை செய்த கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நிறுவனமான VHAK நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு என்னென்ன பணிகளைச் செய்யலாம் என்று என்னுடைய Mentor - ஆல் முடிவு செய்யப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் ன்று ஒன்றியங்களில் CAH தொடங்கப்பட்டுள்ளது என்றும் அதுவும் முக்கியமாக கிராம பஞ்சாயத்துகளில் வேலைச் செய்வதாகவும் அறிந்து கொண்டேன். ஆவை 1. அகஸ்தீஸ்வரம் 2. குருந்தன்கோடு 3. கிள்ளியூர்.

முதன்முறையாக நான் அகஸ்தீஸ்வரம் ஒன்றியத்தை எடுத்து என்னுடைய பணிகளைச் செய்யலாம் என்று முடிவு செய்தேன். அதனைத் தொடர்ந்து அகஸ்தீஸ்வரத்தில் உள்ள 13 பஞ்சாயத்துகளுக்கு சென்று கிராமங்களை பார்வையிட்டடேன். அதோடு VHWSC formation, VHWSC Orientation meeting- ல் கலந்து கொண்டேன். அந்த நிகழ்வுகளில் நான் என்னுடைய நோக்கங்கள் பற்றி விவரித்தேன் .

## How did Orientation help?

CHC- ல் Orientation போது NRHM மற்றும் VHWSC பற்றி விவரிக்கும்போது கொஞ்சம் புரிந்தது. ஆனால் CAH -Project- ல் VHWSC உறுப்பினர்களுக்கு பயிற்சி கொடுக்கும்போது அதைப் பற்றி மிகவும் விளக்கமாக தெரிந்து கொண்டேன். தெரிந்து கொண்டதோடு மட்டுமல்லாமல் Intern ஆகிய நானும் VHWSC உறுப்பினர்கள் மத்தியில் VHWSC Orientation meeting நேரத்தில் உறுப்பினர்களுக்கு பயிற்சி கொடுத்தேன். அது மிகவும் பயனுள்ளதாக இருந்ததோடு என்னுடைய திறமையை ஊக்குவிப்பதற்கும் வசதியாக அந்த பயிற்சிகள் இருந்தது. எந்த ஒரு செயலையும்

நடைமுறைப்படுத்தும்போது தான் அதைப் பற்றி முழுமையாக, மிகவும் விவரமாகவும் புரிந்து கொள்ளலாம் என்பதை நான் தெரிந்து கொண்டேன்.



**Figure 1 Training to VHWSC**

<u>என்னுடைய குறிக்கோளை செயல்படுத்துவதற்காக நான் எடுத்துக்கொண்ட கிராமம்.</u>

முக்கியமாக நான் எல்லா இனத்தவரும் இருக்கக் கூடிய கிராமத்தை எடுத்து என்னுடைய பணிகளைச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தேன். ஏனென்றால் தீண்டாமை என்ற கொடுமை கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிறதா? என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமானது எனக்கு போத்தநல் கிராமத்தைப் பார்வையிட்ட பிறகு என்னுள்ளே எழுந்தது. ஆகவே நான் கடைசியாக “கரியமாணிக்கபுரம் பஞ்சாயத்தை” தேர்ந்தெடுக்கலாம் என்று தீர்மானித்தேன். ஏனென்றால் அந்த கிராமத்தைப் பார்த்து மக்களோடு பேசிய போது அந்த கிராமத்தில் எல்லா இனத்தவரும் இருந்தனர். மேலும் அக்கிராமத்தில் துப்புரவு வசதிகள் மிக மோசமாக இருந்தது. ஆகவே அந்த பஞ்சாயத்தில் என்னுடைய பணிகளைச் செய்யலாம் என்று தீர்மானித்தேன்.

நடைமுறைப்படுத்தும்போது தான் அதைப் பற்றி முழுமையாக, மிகவும் விவரமாகவும் புரிந்து கொள்ளலாம் என்பதை நான் தெரிந்து கொண்டேன்.



**Figure 1 Training to VHWSC**

<u>என்னுடைய குறிக்கோளை செயல்படுத்துவதற்காக நான் எடுத்துக்கொண்ட கிராமம்.</u>

முக்கியமாக நான் எல்லா இனத்தவரும் இருக்கக் கூடிய கிராமத்தை எடுத்து என்னுடைய பணிகளைச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தேன். ஏனென்றால் தீண்டாமை என்ற கொடுமை கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிறதா? என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமானது எனக்கு போத்தநல் கிராமத்தைப் பார்வையிட்ட பிறகு என்னுள்ளே எழுந்தது. ஆகவே நான் கடைசியாக "கரியமாணிக்கபுரம் பஞ்சாயத்தை" தேர்ந்தெடுக்கலாம் என்று தீர்மானித்தேன். ஏனென்றால் அந்த கிராமத்தைப் பார்த்து மக்களோடு பேசிய போது அந்த கிராமத்தில் எல்லா இனத்தவரும் இருந்தனர். மேலும் அக்கிராமத்தில் துப்புரவு வசதிகள் மிக மோசமாக இருந்தது. ஆகவே அந்த பஞ்சாயத்தில் என்னுடைய பணிகளைச் செய்யலாம் என்று தீர்மானித்தேன்.

**WORKING WITH NRHM**

**நான் கற்றுக்கொண்டவை**

1. VHWSC Oriention - என்றால் என்ன? என்றும், எதற்காக தொடங்கப்பட்டுள்ளது என்றும் தெரிந்து கொண்டேன். அதனைத் தொடர்ந்து நானும் VHWSC Orientation meeting- ல் facilitate செய்தேன். தண்ணீரின் முக்கியத்துவம் என்ன என்பதையும் அதனால் வரும் நோய்கள் பற்றியும் 7 பயிற்சிகளில் விளக்கினேன்.
2. VHWSC குழுவில் யாரெல்லாம் இருக்கின்றனர் என்று தெரிந்து கொண்டேன் (அதாவது பஞ்சாயத்து தலைவர் கிராம செவிலியர், வார்டு உறுப்பினர், சுய உதவி குழு (SHG) பிரதிநிதி, ஓய்வு பெற்ற ஆசிரியர்). ஆனால் ஒவ்வொரு கிராமங்களில் உள்ள உறுப்பினர்கள் VHWSC குழுவில் இருக்க வேண்டும் என்பதே சரியானதாக இருக்கமுடியும்.
3. VHWSC உறுப்பினர்களின் பொறுப்புக்கள் என்னென்ன என்பதை கற்று கொண்டேன் .
4. கிராம செவிலியரின் வேலைகள் என்னென்ன என்பதைக் கற்று கொண்டேன்.
5. அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் என்னென்ன வசதிகள் இருக்கின்றன, என்ன வசதிகள் இல்லை, தொழில் நுட்பங்களைக் கையாள தேவையான பணியாளர்கள் பற்றாகுறை போன்றவற்றை PHC - க்கு சென்று அங்கு உள்ள பணியாளர்களிடம் பேசிய போது அறிந்து கொண்டேன்.

இந்த Orientation & Formation பயிற்சியின் போது மக்கள் தங்களது சுகாதாரப் பிரச்சனைகளையும், சமூதாயத்தில் கிராம செவிலியரின் பணிகள் எனனென்ன என்பதையும், அரசு மருத்துவமனையின் வசதிகள் மற்றும் பணிகள் என்ன என்பதையும் அறிந்து கொண்டேன். குறிப்பாக கிராம செவிலியர், குறிப்பிட்ட பகுதிகளுக்கு செல்லாமை, கிராம செவிலியர் யார் என்றே தெரியாமை மற்றும் அரசு மருத்துவமனையின் கவனிப்பு சரியாக இல்லாதது போன்றவைகளே. மக்கள் அரசு

மருத்துவமனைக்கு செல்லாமை ஆகும் என்பதை அறிந்து கொண்டேன். அதுமட்டுமல்லாமல் அரசு மருத்துவமனைக்கு செல்வதற்கு போதிய பேருந்து வசதியின்மை, நீண்ட தூரம் பயணம் இதுவும் ஒரு முக்கியமான காரணமாகும் என்பதை பயிற்சிக்கு வந்த உறுப்பினா்களின் விவாதத்தின்போது அறிந்து கொண்டேன்.



Figure 2 Talking with VHN about the Village Visit

### VHWSC உறுப்பினா்களின் பொறுப்புகள்

- ❖ ஒவ்வொரு கிராமத்தின் நலவாழ்வு நிலமை குறித்து ஆய்வு செய்தல், நல வாழ்வு தேவைகளை பரிசீலனை செய்து அவற்றை மக்களின் தேவைக்கேற்ப வரிசைப்படுத்துதல் மற்றும் அப்பகுதி சாா்ந்த நலவாழ்வு திட்டம் தயாரித்தல்.
- ❖ நலவாழ்வு மற்றும் அதை தீா்மானிக்ககூடிய காரணிகள் குறித்து விழிப்புணா்வு செய்தல்.
- ❖ மக்களை ஒருங்கிணைத்தல்.
- ❖ சமுதாய வளங்களை திரட்டுதல்.
- ❖ இனப்பெருக்க மற்றும் குழந்தை நலன்சாா்ந்த சேவைகள் மக்களை சென்றடைவதற்கு துணை நிற்றல்.

- நோய் தடுப்பு நடவடிக்கைகளில் மக்கள் பங்கேற்பிற்கு துணை நிற்றல்.
- சிக்கலான பிரசவம் நிகழ வாய்ப்பபுள்ள மற்றும் ஆபத்தான நிலையில் உள்ள பிறந்த குழந்தை ஆகியோரை மேல் பரிந்துரை செய்வது (அ) செய்தது தொடர்பான வழிமுறைகளை மக்கள் கண்காணிக்கச் செய்வது.
- ஆபத்தான நிலையில் உள்ள தாய் மற்றம் குழந்தைக்கு போக்குவரத்து வசதிகள் செய்வது.
- எளிதில் பரவக்கூடிய நோய்களை கட்டுப்படுத்துவதற்காக அவற்றை கண்காணித்தல் மற்றும் தெரியப்படுத்துதல்.
- ஆண்களுக்கான அறுவை சிகிச்சையில்லா குடும்ப நல கட்டுப்பாடு போன்ற சிறப்பு கவனத்துடன் கூடிய குடும்ப நல சேவைகளை ஊக்குவித்தல்.
- பாதுகாக்கப்பட்ட நீர் கிடைப்பதை உறுதி செய்தல் .
- சேவைகள் சென்று சேராத மக்களுக்கு சேவைகள் சென்றடைவதை ஊக்குவித்தல்.
- அடிப்படை சேவைகளுக்கான தேவையை உருவாக்குதல் (அ) அதிகப்படுத்துதல்.
- தாய் மற்றும் சேய் இறப்பு மீது மக்கள் ஆய்வை நடத்துதல் அவற்றை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளுதல்.
- அவசர சிகிச்சை தேவைக்காக அவசர சிகிச்சை பிரிவை தொடர்பு கொள்ளுதல் மற்றும் வாகனத்தை ஏற்பாடு செய்தல்.
- பெண் சிசு மற்றும் கருக்கொலைகளை தடுப்பதற்காக சமுதாய கண்காணிப்பபை நடத்துதல்.
- பிறப்பு மற்றும் இறப்பை பதிவு செய்தல்.
- மரு. முத்துலட்சுமி ரெட்டி திட்டம், ஜனனி சுரக்ஷா, யோஜனா, பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் ஆகிய திட்டங்களில் பயன்பெற தகுதியானவர்களை கண்டறிவது, அப்பயனாளிகளுக்கு உரிய உதவி தொகையை வழங்குவது போன்றவற்றுக்கு உதவி செய்வது.

❖ பால்வாடி குழந்தை மற்றும் கா்ப்பிணி தாய்மாா்களின் உடல் வளா்ச்சியை கண்டறிதல் மற்றும் அவா்களுக்கு ஊட்ட உணவு கிடைக்க உதவி செய்தல்.

❖ உள்ளூரில் நடக்கும் அனைத்து விதமான நலவாழ்வு செயல்பாடுகளுக்கும் தேவைகளை பூா்த்தி செய்வதற்கும் முழு உதவி செய்தல் மற்றும் அச்செயல்பாடுகளை தொடா்தல்.

❖ சேவைகள் குறித்து சமுக கண்காணிப்பில் ஈடுபடுதல் உதாரணமாக

1. மாதாந்திர தடுப்பூசி முகாம்களை நடத்துதல் மற்றும் பயன்பெறுதல்.
2. குடிநீரை தினமும் குளோாின் கொண்டு சுத்தப்படுத்துதல்.
3. உப்புச் சா்க்கரை கரைசல் கிடைக்கச் செய்தல்.
4. குணநலன் மாறுபாட்டிற்கான தகவல் தொடா்பு கூட்டங்கள் நடத்துதல்.
5. பிறந்த குழந்தைக்கு எடை எடுத்தல்.

❖ ஒவ்வொரு குழந்தையின் பள்ளி வருகையை தொடா்ச்சியாக கண்காணித்தல்.

❖ அனைத்து பயனாளிகளுக்கும் நிதி உதவி கிடைக்கச் செய்தல்

6. சுகாதாரப் பிரச்சனைகளுக்காக 31% மக்கள் எவ்வளவு செலவு செய்கிறாா்கள் என்பதை 'Survey' முலம் கற்ற கொண்டேன். சுகாதார பிரச்சனைகளுக்காக மக்கள் அதிகம் செலவு செய்கின்றனா் என்பதை Orientation பயிற்சியின் முலமும் மற்றும் Immunization Survey முலம் அறிந்து கொண்டேன். குறிப்பாக கரியமாணிக்கபுரம் ஊராட்சியில் கீழ் உள்ள கிராமமான குளத்தூா் மற்றும் கரியாமாணிக்கபுரம் பகுதியில் மக்களில் பெரும் பாலானோா் தனியாா் மருத்துவமனைக்கு செல்கின்றனா். காரணம்,

1. அரசு மருத்துவமனையில் உபசாிப்பு சாியில்லாமை
2. மருத்துவா் சாியாக நோயாளியை பாா்க்காமை .
3. நீண்ட தூரம் பயணம்
4. நீண்ட நேரம் காத்திருத்தல்.

5. ஊசி போடும் இடத்தில் ஆண், பெண் என்ற இரு பாலினருக்கும் தனியாக அறை இல்லாமை.

இந்த 'Survey' ஆனது VHAK பணியாளர் மற்றும் Interns ஆகிய நானும் இணைந்து செய்தோம். நான் 7 Survey செய்து இருந்தேன். இந்த Survey ஆனது பிறந்த குழந்தையின் தாயிடமும் 6 மாதம் முதல் 2 வயது வரை உள்ள குழந்தையின் தாயிடம் Survey செய்தோம். அதன் மூலம் கிராமங்களில் மக்கள் அதிகம் சுகாதாரப் பிரச்சனைகளுக்காக செலவு செய்கின்றனர் என்பதை அறிந்து கொண்டேன்.மக்கள் ஏன் அரசு மருத்துவமனைக்கு செல்ல விரும்பவில்லை என்பதை 'Survey' முலம் கற்றுக் கொண்டேன். (அதாவது no Privacy , Indequate Co-Operation. Less responsibility)

7. மக்களுடைய அறிவுத் திறமையை அந்த 'Survey ' முலம் கற்று கொண்டேன். முக்கியமாக 'கரியமாணிக்கபுரம்' பஞ்சாயத்து கீழுள்ள குளத்தூர் கிராமத்தில் நான் வீடு வீடாக மக்களைச் சந்தித்த போது ஒரு குடும்ப பெண் PHC -ன் செயல்பாடுகள் பற்றி விளக்கினார். அதாவது அந்த பெண்ணுக்கு வயிற்றுப் போக்கு ஏற்பட்டு இருக்கிறது. அந்த பெண் PHC -க்கு சென்று மருந்து கேட்டார். அதற்கு அங்கு உள்ள கிராம செவிலியர் 'ORS' பாக்கெட் கொடுத்து இருக்கின்றனர். ஆனால் அந்த பெண்ணின் அறிவுக் கூரிமையைப் பார்த்து நான் வியந்து போனேன். ஏனென்றால் 'ORS' பாக்கெட்டானது காலம் முடிந்த பாக்கெட்- அதை அந்த பெண் மிகவும் அறிவுக்கூர்மையாக கண்டுபிடித்தது". நான் அந்த பெண்ணிடம் பேசியபோது எனக்கு தெரிய வந்தது.

8. கிராமங்களில் சுகாதார ரீதியாக என்னென்ன பிரச்சனை இருக்கின்றன என்பதையும், அவர்கள் முக்கியமாக எந்த மருத்துவமனைக்கு செல்கின்றனர், ஏன் செல்கின்றனர் என்பதையும் அறிந்து கொண்டேன். கிராமங்களில் பொதுவாக மக்கள் தண்ணீர் மூலம் மற்றும் கொசுக்களின் மூலம் பரவும் நோய்களால் அதிகம் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அதிலும் குறிப்பாக கரிமாணிக்கபுரம் ஊராட்சியின் கீழ் உள்ள பல கிராமங்களில் சாக்கடைக் கழிவுகள் அனைத்தும் குளங்களில் கலக்கின்றனர். போதிய கழிவறை வசதியின்மை காரணமாக திறந்த வெளியில் மலம் கழிப்பதாலும் இவ்வகையான நோய்களுக்கு ஆட்கொள்ளப்படுகின்றனர். குறிப்பாக இந்த மக்கள் குழந்தைகளுக்கு எந்த நோயாவது ஏற்பட்டால் குழந்தைக்கான மருத்துவரை அணுகுகின்றனர். குறிப்பிட்ட நோய் சார்ந்த மருத்துவரை (Specialist) பார்க்க போகின்றனர் என்பதன் மூலம் அவர்களின் விழிப்புணர்வு தெரிய வந்துள்ளது ஆனால் இவர்களில் பெரும்பாலானோர் தனியார் மருத்துவமனைக்கு செல்கின்றனர். என்பதை 'Survey' மூலம் தெரிந்து கொண்டேன்.

9. அன்பியம் அளவிலான திட்டங்கள் தீட்டுதல் ஊராட்சி அளவிலான திட்டங்கள் - குழுக்களில் தீட்டுதல் கலந்து கொண்டு மக்களுடைய உண்மையான பிரச்சனைகள் என்ன என்பதையும் அதை களைய என்னென்ன முயற்சிகளை மேற்கொள்கின்றனர் என்பதையும் கற்றுக் கொண்டேன். (எ.கா) புகையிலை, போதை மருந்து. பொதுவாக கிறிஸ்தவ சமுதாயத்தில் அன்பியம் என்ற ஒரு செயல்பாடனது 30 குடும்பங்களுக்கு ஒன்று என்றும் அதற்கு ஒரு தலைவரையும் தேர்ந்தெடுத்து செயல்பட்டு வருகின்றன. இந்த அன்பியமானது முக்கியமாக அந்த ஊராட்சியில் மற்றும் கிறிஸ்துவ சமுதாயத்தினருக்குள் நடக்க இருக்கும் நிகழ்ச்சிகளையோ, கிராமத்தில் நடைபெறவிருக்கும் பயிற்சிகள் பற்றியும்,குழந்தைகள் பாராளுமன்றம் பற்றிய செயல்பாடுகள் பற்றி கிராம சுகாதார குழுவில் நடைபெற்றிருக்கும் செயல்பாடுகள் பற்றி அன்பியம் அளவிலான தலைவர்களுக்கு தெரியப்படுத்தினால் அதை

8. கிராமங்களில் சுகாதார ரீதியாக என்னென்ன பிரச்சனை இருக்கின்றன என்பதையும், அவர்கள் முக்கியமாக எந்த மருத்துவமனைக்கு செல்கின்றனர், ஏன் செல்கின்றனர் என்பதையும் அறிந்து கொண்டேன். கிராமங்களில் பொதுவாக மக்கள் தண்ணீர் முலம் மற்றும் கொசுக்களின் முலம் பரவும் நோய்களால் அதிகம் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அதிலும் குறிப்பாக கரிமாணிக்கபுரம் ஊராட்சியின் கீழ் உள்ள பல கிராமங்களில் சாக்கடைக் கழிவுகள் அனைத்தும் குளங்களில் கலக்கின்றனர். போதிய கழிவறை வசதியின்மை காரணமாக திறந்த வெளியில் மலம் கழிப்பதாலும் இவ்வகையான நோய்களுக்கு ஆட்கொள்ளப்படுகின்றனர். குறிப்பாக இந்த மக்கள் குழந்தைகளுக்கு எந்த நோயாவது ஏற்பட்டால் குழந்தைக்கான மருத்துவரை அணுகுகின்றனர். குறிப்பிட்ட நோய் சார்ந்த மருத்துவரை (Specialist) பார்க்க போகின்றனர் என்பதன் முலம் அவர்களின் விழிப்புணர்வு தெரிய வந்துள்ளது ஆனால் இவர்களில் பெரும்பாலானோர் தனியார் மருத்துவமனைக்கு செல்கின்றனர். என்பதை ‘Survey’ முலம் தெரிந்து கொண்டேன்.

9. அன்பியம் அளவிலான திட்டங்கள் தீட்டுதல் ஊராட்சி அளவிலான திட்டங்கள் - குழுக்களில் தீட்டுதல் கலந்து கொண்டு மக்களுடைய உண்மையான பிரச்சனைகள் என்ன என்பதையும் அதை களைய என்னென்ன முயற்சிகளை மேற்கொள்கின்றனர் என்பதையும் கற்றுக் கொண்டேன். (எ.கா) புகையிலை, போதை மருந்து. பொதுவாக கிறிஸ்தவ சமுதாயத்தில் அன்பியம் என்ற ஒரு செயல்பாடனது 30 குடும்பங்களுக்கு ஒன்று என்றும் அதற்கு ஒரு தலைவரையும் தேர்ந்தெடுத்து செயல்பட்டு வருகின்றன. இந்த அன்பியமானது முக்கியமாக அந்த ஊராட்சியில் மற்றும் கிறிஸ்துவ சமுதாயத்தினருக்குள் நடக்க இருக்கும் நிகழ்ச்சிகளையோ, கிராமத்தில் நடைபெறவிருக்கும் பயிற்சிகள் பற்றியும்,குழந்தைகள் பாராளுமன்றம் பற்றிய செயல்பாடுகள் பற்றி கிராம சுகாதார குழுவில் நடைபெற்றிருக்கும் செயல்பாடுகள் பற்றி அன்பியம் அளவிலான தலைவர்களுக்கு தெரியப்படுத்தினால் அதை

குடும்பங்களுக்கு விளக்குகின்றனர். இது மிகவும் எளிதான, சிறப்பான முறையாகும் சமுதாயத்தில் தகவல்களை தெரிவிப்பதற்கு.



**Figure 3 Training @ Anbiyam (Neighbourhood Commitee)**

இந்த அன்பியம் அளவிலான திட்டங்கள் தீட்டுதல் கூட்டமானது கன்னியாகுமரி மாவட்டத்தில் குருந்தன்கோடு ஒன்றியத்தின் கீழ் உள்ள கிராமமான கோடிமுனை கிராமத்தில் வைத்து நடைபெற்றது. அந்த கிராமத்தில் மக்கள் குறிப்பாக புகையிலைமற்றும் போதை மருந்து பிரச்சனையே மிகப்பெரிய பிரச்சனையாகும் என்று விவாதித்தனர். இறுதியாக அந்த கூட்டத்தில் கிராமத்தின் பாதிரியார் மற்றும் அந்த மக்கள் அனைவரும் தீர்மானம் எடுத்தனர். அதாவது புகையிலை கடைகளுக்கு சென்று விழிப்புணர்வு கொடுக்கலாம் என்றும் போதை மருந்து ஒழிப்புக்காக குறிப்பிட்ட குடும்பங்களின் அருகில் இருக்கும் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுக்க முயற்சிகள் மேற்கொள்வதாகவும் தீர்மானம் எடுத்தனர்.

10. கிராமங்களில் சமுதாய வரைபடம் வரைந்ததன் வாயிலாக ஊரிலுள்ள வளங்கள் மற்றும் இடங்களை உணர முடிந்தது.

11. என்னென்ன அடிப்படையான Health Care அவர்களுக்கு கிடைக்கவில்லை, அதற்கு என்னென்ன வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் உணர்ந்து கொண்டேன்.

12. ஊராட்சி தலைவர்கள் எவ்வாறு செயல்படுகின்றனர் என்பதையும், கிராமத்திற்காக என்னென்ன வசதிகளைச் செய்து கொடுக்க முயற்சிக்கின்றனர் என்பதையும் கற்று கொண்டேன்.



13. தண்ணீரும், சுகாதாரமும் எவ்வளவு முக்கியமானது, ஒரு நல்ல சுகாதாரமான வாழ்க்கை வாழ்வதற்கு தேவை என்பதைக் கற்று கொண்டேன்.

14. ஆரம்ப சுகாதாரம் = அடிப்படைத் தேவைகளான தண்ணீர், உணவு, சுகாதாரம், சுற்றுச்சூழல் இவையெல்லாம் சேர்ந்ததே ஒரு உண்மையான PHC (Primary Health Care) என்பதைக் கற்று கொண்டேன். ஏனென்றால் அதற்கு முன்பாக நான் வெறும் மருந்தும், மருத்தவரும், மருத்தவமனையும் சேர்ந்ததே ‘Health’ என்று நினைத்து இருந்தேன். இப்போது நான் மேற்சொன்னவைகள் எல்லாம் சேர்ந்ததே உண்மையான ‘Health' Care’ என்பதைக் கற்று கொண்டேன். இதுவே நான் களப்பணியில் என்னுடைய வேலைகளைச் செய்வதற்கு மிகவும் உதவியாக இருந்தது.

## நான் செய்த வேலைகள்

நான் முக்கியமாக கன்னியாகுமரி மாவட்டத்தில், அகஸ்தீஸ்வரம் ஒன்றியம் கீழ் உள்ள ஒரே ஒரு பஞ்சாயத்தை எடுத்துக் கொண்டு என்னுடைய வேலைகளைச் செய்தேன் .

பஞ்சாயத்தின் பெயர்: கரியமாணிக்கபுரம்

மொத்த கிராமங்கள் : 13

பணி செய்த கிராமங்கள் : 3

## கிராமத்தை பற்றி தெரிந்து கொள்ள நான் செய்தவைகள்

முதற்கட்டமாக நான் அந்த கிராமத்தைப் பற்றி அறிந்து கொள்ள ''கிராம வரைபடம்'' ஒன்றை VHWSC நபர்களின் உதவியாலும், வார்டு உறுப்பினர் மற்றும் பொதுமக்களின் உதவியாலும் நல்ல முறையில் வரையப்பட்டது. அதிலிருந்து நான் என்னென்ன பிரச்சனைகள் அந்த கிராமங்களில் இருக்கின்றன, என்னென்ன வளங்கள் இருக்கின்றன என்பதை அந்த வரை படத்தின் மூலம் தெரிந்து கொண்டேன்.

அதனைத் தொடர்ந்து நான் ஊராட்சி தலைவரிடம் சுகாதார பிரச்சனைகள் பற்றி பேசினேன். பின்னர் தண்ணீர் பரிசோதனைச் செய்யலாம் என்று நினைத்தேன். ஏனென்றால் அந்த கிராமங்களில் நல்ல தண்ணீரானது 5 நாளைக்கு ஒரு முறை வரும். மற்ற தண்ணீரானது 3 அல்லது 2 நாளைக்கு ஒரு முறையே வரும். ஆகவே நான் முதலாவதாக தண்ணீர் பரிசோதனை செய்யலாம் என்று நினைத்தேன். அதற்காக ஊராட்சி தலைவியிடம் பேசினேன். நான் பேசிய போது ஊராட்சி தலைவி கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு தான் நீர் வழங்கல் துறையானது ஒவ்வொரு கிராமங்களிலிருந்தும் தண்ணீரை பரிசோதனைக்காக எடுத்துச் சென்றுள்ளது என்று கூறினார். பின்னர் தண்ணீரில் எந்த பிரச்சனையும் இல்லை ஒரு கிராமத்தை தவிர மற்ற அனைத்து கிராமங்களிலும்

தண்ணீரின் தரமானது தான் என்று கூறியது. அந்த நீர் வழங்கல் துறையுடன் தொடர்பு கொண்டேன். அதற்கு அந்த துறையின் அதிகாரி அந்த Borewell - ஐ சீக்கிரம் சரிசெய்து தருகிறோம் என்று கூறினார். நீர் மாசடைந்த கிராமத்தின் பெயர் பாறைக்கால்மடம் (Paraikalmadam). அங்கு குழாய் போடும்போது தண்ணீரைப்பரிசோதனைச் செய்யாமல் போட்டதால் இந்த நிலை ஏற்பட்டுவிட்டது என்றும் இப்போது அந்த குழாய் அடைக்கப்பட்டுவிட்டது என்றும் கூறினர். அந்த 'பாறைக்கால் மடம்' மக்கள் குடிப்பதற்காகவும், மற்ற தேவைககாகவும் பக்கத்தில் உள்ள குழாயில் தண்ணீரை எடுத்து பயன்படுத்துகின்றனர். பஞ்சாயத்து தலைவியும் இந்த தகவலை அதற்குரிய துறையிடம் உடனே தெரியப்படுத்தி விட்டார். ஆனால் அதைச் செயலில் கொண்டுவர சிறிது காலம் ஆகும் என்று கூறினார். நானும் அதை எவ்வளவு சீக்கிரம் உங்களால் செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரம் செய்து முடியுங்கள் என்று கேட்டுக்கொண்டுள்ளேன். இப்போது நான் அந்த துறை பணியாளரிடம் தொடர்பு கொண்டு பேசியபோது இன்னும் அந்த வேலை தொடங்கவில்லை, ஆனால் விரைவில் அதைச் செய்து விடுவோம் என்று வாக்குறுதி அளித்துள்ளார்.

இரண்டாவதாக அந்த கிராமத்தில் மக்கள் சிக்கன்குனியாவால் பாதிக்கப்பட்டு இருந்தனர். ஆகவே அந்த நேரத்தில் அதிகம் பேர் பாதிக்கப்பட்டிருப்பதையும் மற்றும் அதற்காக விழிப்புணர்வு கொடுக்கலாம் என்று என்னுடைய mentor Dr.Rakhal அவர்களிடம் பேசினேன். கடைசியாக சிக்குன்குனியாவை எப்படியாவது அந்த கிராமத்திலிருந்து அழிக்க வேண்டுமென்றும், அதற்கான விழிப்புணர்வுகளை மக்களுக்குள் கொண்டுவர வேண்டும் என்று தீர்மானித்தோம்.

பின்னர் நான் Midterm Review meeting முடிந்து அங்கு செல்லும்போது 'சிக்குன்குனியா' குறைந்து 'டைபாய்டு' அதிகமாக பரவியது. ஆகவே நான் என்னுடைய திட்டத்தை மாற்றி 'டைபாய்டு' காய்ச்சலுக்கு தேவையான விழிப்புணர்வு வகுப்புகளை

கிராம அளவிலும், VHWSC குழுவிலும் Interns ஆகிய நானும், கிராம செவிலியர் மற்று VHAK களப் பணியாளர்கள் அனைவரும் இணைந்து செய்தோம்.

கிராம நலக்குழு கூட்டத்தின் போது கரியமாணிக்கபுரம் ஊராட்சியின் கீழ் உள்ள குறிப்பாக அந்த குளத்திற்கு அருகில் இருக்கும் குடும்பங்களுக்கு கிராம நலகுழுவாயிலாக டைபாய்டு காய்ச்சலுக்கும் தண்ணீர் முலம் பரவும் நோய்களுக்கும் , கொசுக்கள் முலம் பரவும் நோய்களுக்கும் விழிப்புணர்வு வகுப்பு கொடுப்பதற்காக கிராம அளவில் ஒரு விழிப்புணர்வு கூட்டமானது நடத்தினோம். குறிப்பாக கிராம நல குழு உறுப்பினர்கள் அவர்களது கிராமத்தில் இருக்கும் பிரச்சனைகளுக்கு ஏற்ப அவர்கள் விழிப்புணர்வு வகுப்புகள் நடத்த தீர்மானம் எடுத்து அதை வெற்றிகரமாக செய்து முடித்த அவர்களின் திறமையும், விழிப்புணர்வும் பாராட்டுவதற்குரியது.

அதன் பின்னர் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் Mr. ராஜேந்திர ரத்னூ “பூஜ்ஜிய கழிவு மேலாண்மைத்” திட்டத்தைக் கொண்டு வந்து அனைத்து ஊராட்சி தலைவர்களையும் அழைத்து அவர்களுக்கு ஒரு நாள் முழுவதும் அதை எவ்வாறு செயலாக்கத்திற்கு கொண்டு வரலாம் என்று கலந்துரையாடினார். அதே சமயத்தில் நானும் மக்களிடம் சென்று உங்களுடைய குப்பைகளை எங்கே சேமிக்கிறீர்கள் என்றும், எவ்வளவு வீடுகளில் கழிப்பறை உள்ளது, Septic Tank எந்த வீடுகளிலெல்லாம் இல்லை என்பதையும் Survey முலம் அறிந்து கொண்டேன்.



**Figure 4 Home Based Awarness Campaign**

நான் குறிப்பாக கரியமாணிக்கபுரம் ஊராட்சிக்கு கீழ் உள்ள கிராமமான குளத்தூர் கிராமத்தில் ஒரு ஆய்வு செய்தேன் . முக்கியமாக செப்டிக் டேங்க், கழிவறை வசதி மற்றும் குப்பைத் தொட்டி பற்றியும் ஒரு ஆய்வு செய்தேன் . அதன் மூலம் அந்த கிராமத்தில் 150- க்கு உட்பட்ட வீடுகள் இருக்கின்றன. ஆனால் அங்கு குப்பைத் தொட்டி வசதியில்லாமை காரணமாக அவர்கள் குப்பைகளை குளங்களில் மற்றும் ஆறுகளில் கொட்டுகின்றனர் என்றும், கழிவறை வசதியானது 25% மக்களுக்கு இல்லாமை, அவர்கள் திறந்த வெளியில் கழிப்பிடம் செய்வதையும், அதிலும் சில பெண்கள் பொது கழிப்பறைகளைப் பயன்படுத்துவதையும், 50-க்கு மேற்பட்ட வீடுகளில் கழிவறை வசதி இருந்தும் செப்டிப் டேங்க் கட்டாமல் இருப்பதையும் ஆய்வு மூலம் தெரிந்து கொண்டேன். அதன் பிறகு அந்த செப்டிக் டேங்க் இல்லாத வீடுகளில் அந்த கழிவுகளை அருகில் இருக்கும் குளங்களுக்கு விடுவதே மிகவும் வருத்தமளிப்பதாகும் . ஆனால் அது பற்றி அந்த குடும்பங்களிடம் பேசும் போது அவர்களின் பிரச்னையான இடவசதியின்மையும் மற்றும் ஒரு சிலர் அதை அலட்சியமாக எடுப்பதையும் தெரிந்து கொண்டேன் . பின்னர் மக்களிடம் அதனால் வரும் நோய்கள் பற்றி கிராம நல குழுவில் ஊராட்சித் தலைவியின் முன்னிலையில் விளக்கினோம். அது மட்டுமல்லாமல் வார்டு உறுப்பினர்களைக் கொண்டு

குழுக்களில் விழிப்புணர்வு கொடுத்தோம். தற்போது ஒரு சில வீடுகளில் செப்டிக் டேங்க கட்டி உள்ளதாக அந்த மக்களிடம் கேட்டு தெரிந்துக் கொண்டோம் .

அதற்காக மக்களிடம் பேசியபோது மக்கள் எங்களுக்கு இடவசதியின்மை, போதிய குப்பைத் தொட்டியின்மை ஆகவே நாங்கள் குப்பைகளையும், கழிவு நீரையும், குளங்களிலும், ஆறுகளிலும் விடுகிறோம் என்று கூறினர். பின்னர் நான் இதே குப்பைத் தொட்டி பிரச்சனையை VHWSC குழுவிலும் கொண்டு சென்றோம். VHWSC உறுப்பினர்களும் தங்களுக்கு குப்பைத் தொட்டியை எந்தெந்த இடங்களில் வைக்க வேண்டும் என்பதை அவர்களே தீர்மானித்தனர்.

வீடுகளில் சேர்த்து வைக்கும் பிளாஸ்டிக் மற்றும் பாலிதீன் கழிவுகளை பஞ்சாயத்தானது வாரத்திற்கு ஒரு முறை கிராமத்திற்கு வந்து எடுத்து கொண்டு போக ஏற்பாடு செய்கிறேன் என்று பஞ்சாயத்து தலைவி உறுதி அளித்தார். இத்திட்டத்தை முறையாக குழுக்களில் பேசி, முடிவுகளை எடுத்து, குழு உறுப்பினர்கள் அமுலுக்கு கொண்டு வாருங்கள். பின்னர் பொதுமக்கள் இந்த செயல்முறையை பார்த்து அவர்களும் பின்பற்றுவர் என்று VHWSC குழுவில் பேசப்பட்டது. இப்போது பஞ்சாயத்து தலைவி அந்த குப்பைத் தொட்டிக்கும், விழிப்புணர்வு பலகை செய்வதற்கும் அறிவிப்பு கொடுத்து உள்ளார். அடுத்டுத்த மாதங்களில் நான் கிராமத்திற்கு சென்ற போதெல்லாம் இத்திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளதா என்பதை அறிந்து, பார்வையிட்டு மக்களிடம் அது பற்றி பேசினேன். குப்பைத் தொட்டியும் அதனைச் சார்ந்த தகவல் பலகையும் இப்போது கிராமத்தில் வைக்கப்பட்டுள்ளது. மக்கள் குப்பைகளைக் குப்பைத் தொட்டியில் போட்டு வருகின்றனர் என்பதை நான் அங்கு சென்று பார்த்த போது அறிந்து கொண்டேன்.

அது மட்டுமல்லாமல் அந்த கிராமத்தில் குப்பைகளை அகற்றும் இரண்டு பணியாளர்களைச் சந்தித்து பேசினேன் . அப்போது அவர்கள் கூறுகையில் அந்த ஊராட்சிக்கு உட்பட்ட அனைத்து கிராமங்களிலும் குப்பைத் தொட்டி வசதி செய்து

# CHAPTER – IV

**மூன்று மாதங்களாக சமுதாயத்தில் என்னுடைய செயல்பாடுகள்: THREE MONTHS ACTIVITIES**

கடந்த ஆறு மாதப் பணிக்கு பிறகு நான் பார்த்த பல பிரச்சனைகளுக்காக தண்ணீர் மற்றும் தண்ணீர் சாந்த விழிப்புணர்வு பயிற்சி மற்றும் விழிப்புணர்வு கண்காட்சி ( Health & Hygiene ) கொடுக்கலாம் என்று திட்டமிட்டோம் . குறிப்பாக கிராமங்களின் முக்கிய பிரச்சனையான தண்ணீர் மற்றும் தண்ணீரினால் பரவக்கூடிய நோய்கள் பற்றி மேற் கண்டவைகளை செய்யலாம் என்று தீர்மானித்தோம் . குறிப்பாக கண்காட்சியானது பள்ளி குழந்தைகளுக்கும், கிராம மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தில் அந்த விழிப்புணர்வு கண்காட்சியானது பள்ளியில் நடத்தப்பட்டது . தண்ணீர் மற்றும் அதன் நோய்கள் குறித்த விழிப்புணர்வு பயிற்சியானது அகஸ்தீஸ்வரம் ஒன்றியத்திற்கு கீழ் உள்ள ராமாபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட கிராமமான கோழிக் கோட்டு பொத்தை கிராமத்தில் நடத்தப்பட்டது. இந்த பயிற்சியானது Intern பி.ஷோபா அவர்களால் தண்ணீர் மற்றும் அதனால் குறித்த நோய்கள் பற்றிய வகுப்பானது நடத்தப்பட்டது. NRHM-CAH பணியாளர் திரு. ராஜன் அவர்களால் VHWSC பணிகள் மற்றும் செயல்பாடுகள் பற்றி விளக்கப்பட்டது.

**விழிப்புணர்வு கண்காட்சியில் வைக்கப்பட்டவைகள் ( Stalls)**

1. கை கழுவும் முறை - பள்ளி குழந்தைகளால் கை கழுவுவதற்கான 5 படிகள் பற்றி செய் முறை மூலம் விளக்கப்பட்டது.
2. தன் சுத்தம் - தன் சுத்தம் பற்றி மாணவர்களால் செய்முறை மற்றும் சார்ட், படங்கள் மூலமும் விவரிக்கப்பட்டது.
3. ஊட்டச் சத்து குறித்த ஸ்டால் - காய்கறிகள், மற்றும் பழவகைகளை வரிசைப்படுத்தி வைத்து அதில் என்ன வைட்டமின் சத்து உள்ளன என்பதை NRHM பணியாளர்களால் விளக்கப்பட்டது.

4. தண்ணீர் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் - சார்ட் , படங்கள் வாயிலாக விவரிக்கப்பட்டது. குறிப்பாக தண்ணீரின் அவசியம், அதன் பயன்கள், அதை எவ்வாறு பாதுக்காப்பது மற்றும் பயன்படுத்துவது என்பது பற்றி விவரிக்கப்பட்டது





**Figure 6 Health Stalls @ Exhibition**

5. தண்ணீர மற்றும் கொசுவினால் பரவும் நோய்கள் - DDH மற்றும் பள்ளி குழந்தைகளால் செயல்முறை மூலம் விளக்கப்பட்டது. குறிப்பாக கொசுவலை போடப்பட்டு அதன் உள்ளே குழந்தைகளை படுக்க வைத்தும், கொசவலை வெளியே ஒரு குழந்தையை படுக்க வைத்தும், ஒரு குழந்தையை கொசு வேடம் பூண்டு கொசு வலைக்கு வெளியே படுத்து இருக்கும் குழந்தையை

கடிப்பது போன்று நடித்து காட்டப்பட்டது. இதிலிருந்து கொசுவலையை பயன்படுத்துவது மிக முக்கியமாகும், கொசுவினால் பரவும் நோய்களிலிருந்து பாதுகாக்க மேற்கண்ட முறைகளைக் கையாள்வது மிக முக்கியம் என்பதை உணர்த்துகிறது.



**Figure 7 Mosquito Net Usage Demo by children**

6. NRHM - PHC, GH, SHCன் சேவைகள் குறித்த சார்ட் மற்றும் படங்களும், ஆம்புலன்ஸ் 108ன் சேவைகள் பற்றியும் NRHM பணியாளர்களால் விளக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து NRHM குறித்த வினாக்கள் தொடுக்கப்பட்டு அதற்கு சரியாக விடையளிப்பவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

7. குழந்தைகள் பாராளுமன்றம் (Children parliament) - இதில் பள்ளி குழந்தைகளுக்கு ஒவ்வொரு பொறுப்புகள் கொடுத்து அதில் அவர்களது பணிகள் குறித்து பேசப்பட்டது. eg. கல்வி அமைச்சர் தன்னுடைய பணிகள் குறித்து பேசுதல் நிதி அமைச்சர் தன்னுடைய பணிகள் குறித்து பேசுதல்.

8. வேலை வாய்ப்பு உதவி - எதிர் காலத்தில் இளைஞர்கள் என்ன வேலைச் செய்யலாம் என்பது குறித்து Flex மூலம் விளக்கப்பட்டது .

9. TV Show Stall/வினாடி வினா - குப்பைகளை எவ்வாறு குப்பைத் தொட்டியில் இரண்டாக அதாவது மட்கும் குப்பை மற்றும் மட்காத குப்பை என்று எவ்வாறு தரம் பிரித்து போடுவது குறித்தும் , தண்ணீரின் பாதுகாப்பு குறித்தும் டிவி ஷோ மூலம் காண்பிக்கப்பட்டு NRHM – CAH பணியானர்களால் விவரிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஒட்டு மொத்த நிகழ்ச்சி குறித்த வினாக்கள் தயாரிக்கப்பட்டு அது குறித்து பள்ளி குழந்தைகள் மற்றும் கிராம மக்களிடம் கேட்கப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது குறிப்பாக பள்ளி மாணவர்கள் இதில் மிகவும் ஆர்வமாக தங்களுடைய பதில்களைச் சொல்லி பரிசுகளை தட்டிச் சென்றனர்

**விளைவுகள்**

பள்ளி குழந்தைகள் தண்ணீர் மற்றும் அதனால் பரவும் நோய்கள் குறித்தும், NRHM குறித்தும் ஊட்டச்சத்துள்ள உணவுகள் மற்றும் உப்பு சர்க்கரை கரைசல் பற்றியும் அறிந்து கொண்டனர் என்பதை மேற்கண்ட வினாடி வினா மூலம் தெரிய வந்தது .

**கடைசி மூன்று மாத பணிகள் மூலம் நான் கற்றுக் கொண்டது**

- ஒரு நிகழ்ச்சியானது செய்வதற்கு முன்பு பட்ஜெட் தயார் செய்வது எப்படி என்று கற்றுக் கொண்டேன்.
- அரசு அதிகாரிகளை பார்க்க என்னென்ன யுக்திகளைக் கையாளுவது என்பதை கற்று கொண்டேன்.
- தண்ணீர் மற்றும் அதனால் ஏற்படும் நோய்கள் மற்றும் அதை பரவாமல் தடுக்க என்னென்ன செய்ய வேண்டும் என்பதை, அது தொடர்பான பயிற்சிகள் வழங்கியதன் மூலமும், சிறு புத்தகம் தயார் செய்ததன் மூலமும் கற்றுக் கொண்டேன்.
- சிறு புத்தகம், பிரசுரங்கள் தயார் செய்வது எப்படி என்பதை கற்றுக் கொண்டேன்.
- சுகாதார ஆய்வாளரின் பொறுப்புகள் என்ன என்பதை பிரசுரங்கள் தயார் செய்ததன் மூலம் கற்றுக் கொண்டேன்.
- பயிற்சி எவ்வாறு கொடுப்பது என்பதைக் கற்றுக் கொண்டேன்.
- விழிப்புணர்வ கண்காட்சி எப்படி செய்வது என்பதைக் கற்றுக் கொண்டேன்.
- மக்களுக்கு எவ்வாறு விழிப்புணர்வு அளிப்பது என்பதை அறிந்துக் கொண்டேன்.

## CHAPTER –V

## WHAT I LEARNT MY SELF

- தன்னம்பிக்கை
- ஆரம்ப சுகாதாரம்
- பேச்சு திறமையை வளர்த்தல்
- பலசின் முன்னிலையில் பேச
- மற்றவர்கள் ஏதாவது கருத்து கூறுவதைப் புறக்கணிக்காது ஏற்றுக் கொள்ளுதல்
- கட்டுப்படுத்தும் திறமையை அதிகரித்தல்
- கணிணி திறமையை அதிகரித்தல்
- தன்னை தானே மதிப்பிடுதல் - எடுத்துக்காட்டாக கூட்டத்தில் பேசும் போதும், சிலர் அதற்கு எதிர்மாறாக பேசும் போதும், நண்பர்களிடம் பேசும் போதும் அவர்கள் கூறுவதை அமைதியாக கேட்டல்.

## LEARINING OBJCECTIVE MY SELF ( PERSONAL DEVALOPEMENT GOALS)

- Development of Personallity skills
- To improve my leadership skills
- To improve Speaking & Writing Documentation skills
- To learn More about health

**LEARINING OBJCECTIVE FOR THE PROGRAMME**

- To understand Primary Health care
- To understand Community Health
- To understand NRHM Through Community Action for Health Project
- To understand Issues realted to Water & Sanitation
- To explore opportunities of bringing about changes in water & Sanitation through community action.

# CHAPTER. -VI

## OVER ALL LEARNING

Personality Development வகுப்பின் போது நான் சமுதாயத்தைப் பற்றியும் அதனுடைய முறைகள் பற்றியும் கற்று கொண்டேன் . இந்த வகுப்பின் மூலம் நான் களப் பணியின் போது எப்படி ஒரு பிரச்சனையை எதிர்கொள்வது என்றும் , இந்த வகுப்பில் நடந்ததை என்னுடைய Objectiveவோடு ஒப்பிட்டு பார்க்க நல்ல ஒரு வாய்ப்பாக அமைந்தது. எதிர்காலத்தில் வரும் எதிர்ப்புகளை எப்படி சமாளிக்க வேண்டும் என்பதை அறிந்து கொண்டேன். இந்த வகுப்பின் பயிற்சியின் போது நம்முடைய Body Language எப்படி இருக்க வேண்டும் என்பதை அறிந்து கொண்டேன். வகுப்பின் மூலம் சமுதாயத்தில் வரைபடம் எப்படி வரைவது என்பது பற்றி கற்று கொண்டேன். அது மட்டுமல்லாமல் அதை கிராமத்தில் செய்த போது மிகவும் அருமையாக புரிந்தது. அந்த கிராம மக்களுடைய எண்ணங்களோ மிகவும் வித்தியாசமாகவும் புதியதாகவும் இருந்தது. (கொல்லேகால் தாலுகா)

களப்பணிகள் மூலம் சமுதாய வரைபடம் எப்படி வரைவது என்பது பற்றியும். சந்தர்பவாத நோய்கள் பற்றிய வரைபடம் எப்படி வரைவது என்பதை PRA வகுப்பின் மூலமும், களப்பணியில் மூலமும் கற்றக் கொண்டேன். PRA வகுப்பின் மூலம் PRA –ன் (பாதை) கற்றுக் கொண்டேன் .

1. துன்பத்திலிருந்து விடுதலை மற்றும் மேம்பாடு அடைய ( Relief and welfare )

2. Self reliance of the community ) நம்புதற்குரிய நிலையை சமுதாயத்தில் ஏற்படுத்துதல். (மக்களே அதைப்பற்றி உணரச் செய்தல்)

3. முறைமைகளின் (Systems Change) மாற்றங்களைப் பற்றியும் PRA –வகுப்பின் மூலம் கற்றுக்கொண்டேன் .

**SYSTEM CHANGE**

Ex. 1. Events → Fire → React

2. Patterns → Under stand → Looking at the patern

3. Structure → Causing → How do create change Structure → How its reduce

PRA – களப்பணியின் மூலம் மக்களுடைய பங்கேற்பு மற்றும் உருவாக்கும் திறமையைக் கற்று கொண்டேன். PRA –வகுப்பின் மூலம் நான் 2 விதமான விஷயங்களை கற்றுக் கொண்டேன் .

Lead time - Validity of Information

Lag time - Action taken

Mr.Shridi - வகுப்பின் மூலம் பயிற்சிகளை எப்படி கையாளுவது என்பதை பற்றி கற்றுக் கொண்டேன் . அது மட்டுமல்லாமல் அதை எந்த முறையில் கையாளுவது என்பது பற்றியும் கற்றக் கொண்டேன். அது மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

i. Objectives

ii. media & methods

iii. Evaluate

Knowledge - Thinking

Attitude - Feeling

Practice - Doing / Group Activities

Knowledge - Lecturer, Discussion, Referral, Pamphlets

Attitude – Case Studies, Stories , Group Discussions

Mrs.Vasundara வகுப்பின் மூலம் நான் புகையிலையினால் (Tobacco) வரும் வித்தியாசமான புற்று நோயைப் பற்றி கற்றுக் கொண்டேன். இந்த வகுப்பில் காண்பிக்கப்பட்ட புகைப்படங்கள் பார்ப்பதற்கு மிகவும் உணர்ச்சி வசமாக இருந்தது.

Mrs. சத்திய ஸ்ரீ வகுப்பு மிகவும் பயனள்ளதாக இருந்தது. HIV/ AIDS பற்றியும் அதில் எனக்கு உண்டான சந்தேகங்கள் நிவர்த்தி செய்து கொண்டேன்.

Six Monthly meeting மூலம் HIV/AIDS பற்றி அதிகம் அறிந்து கொண்டேன். அறிகுறிகள் தடுக்கும் முறை பற்றி விளக்கமாக கற்று கொண்டேன்.

Personality Development - வகுப்பு மிகவும் என்னை சந்திக்க வைக்க கூடியதாகவும், எதிர்காலத்தைப் பற்றி யோசிக்கவும் செய்தது . ஆது மட்டுமல்லாமல் பயிற்சியின் போது எப்படி தங்களுடைய உடல் அசைவுகள் இருக்க வேண்டும் என்பதை Mrs. Shoba Mangoli வகுப்பின் மூலம் கற்றுக் கொண்டேன்.

**ORIENTATION MEETING** – Mansoon விளையாட்டு மிகவும் சிறப்பாகவும் பயனுள்ளதாகவும் இருந்தது.

**STUDY CIRCLE -** மிகவும் பயனுள்ளதாகவும் என்னுடைய திறமையை மேம்படுவதற்கு ஒரு வழியாகவும் பயத்தை போக்குவதற்கு பாலமாகவும் இருந்தது. ஒவ்வொரு குழுவும் தங்களுடைய திறமையை வெளிப்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பாக இருந்தது.

பேரழிவு மற்றும் உடல் ரீதியான வகுப்புகள் மிகவும் பயனுள்ளதாகவும் இருந்தது. இந்த வகுப்புகள் மூலம் கற்று கொண்டவற்றை களப்பணியில் பயன்படுத்தலாம் என்ற ஒரு

எண்ணம் தோன்றியது . அதை சுனாமியால் மற்றும் பேராபத்துகளில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மத்தியில் உபயோகப்படுத்த வசதியாக இருந்தது .

Intern Ms.Lavanya - வகுப்பின் மூலம் ரிப்போர்ட் தயார் செய்வதற்கான கொள்கைகளை கற்றுக் கொண்டது மிகவும் உதவியாக இருந்தது. என்னுடைய ரிப்போர்ட் எழுதவதற்கு

- The Chunking principle
- The relevance principle
- The labelling principle
- Consistency principle
- The integrated graphics principle
- The accessible details
- The hierarchy principle

Ms. Lavanya வகுப்பைக் கொண்டு சென்ற விதம் மிகவும் உற்சாகமாகவும் புரிந்து கொள்வதற்கு மிகவும் எளிதாகவும் இருந்தது. Ms. lavanya - வின் கற்பிக்கும் முறை அனைவரையும் மிகவும் கவர்ந்தது, குறிப்பாக அந்த வகுப்பிற்கு பயன்படுத்திய பேப்பர், பேனா, பென்சில், கலர் பேனாக்கள், பின் மற்றும் டம்ளர்கள், இவைகளை கொண்டு fellows வித விதமாக தங்களது எண்ணங்களை வெளிப்படுத்தினர். அது மட்டுமல்லாமல் எல்லா Fellows –ம் அதை முன்னால் வந்து விளக்குவதற்கு கொடுத்த வாய்ப்பும், அவர்களது எண்ணங்களையும், பயத்தையும் போக்குவதற்கு ஒரு மிகப்பெரிய வாய்ப்பாக எனக்கு தோன்றியது. Ms. Lavanya பயன்படுத்திய Methodology பிற்காலத்தில் கிராமத்தில் பயிற்சிகள் கொடுப்பதற்கு மிகவும் பயன் உள்ளதாக இருக்கும்.